# சிலப்பதிகாரத்தில் ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும்

**திருச்செல்வம் கிஷாந்தினி,**
விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
kishanthiny.t@gmail.com.

**ஆய்வுச்சுருக்கம்**

இந்துநாகரிகத்தின் அடிப்படையான அம்சங்களில் அரசியல் என்பதும் ஒன்றாகும். இந்துநாகரிகத்தை வளம்படுத்திச் செல்வதில் அரசியலானது புராதன காலத்திலிருந்தே செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளது. ஒரு நாட்டை ஆளும் அரசனுக்குரிய பண்பியல்புகளை நேர்த்தியோடு எடுத்துரைத்த பாங்கு இந்து அரசியற் பனுவல்களுக்கு உண்டு. அரசன் என்பவன் அரச பரம்பரை அல்லது வாரிசுரிமையின் காரணமாகவோ கணக்கற்ற படைவலிமையின் காரணமாகவோ மக்களை ஆளும் இறைமையைப் பெற்றுக் கொண்டு அவர்களை அரசாண்டான். அரச இறைமையைத் தனிஒருவனால் மட்டும் நிறைவேற்ற முடியாது. அதனால் தான் தனியொரு சக்கரம் உருள்வதில்லை என்பதற்கேற்ப பல அங்கங்களைக் கொண்டதாகவே புராதன இந்து அரசியல் முறைமை காணப்பட்டது. கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் சப்த அங்கங்களை அரசியலுக்கு வகுத்துள்ளது. இதேபோல ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்ற அரசவைக் குழுக்களையும் அரசனுடைய அங்கங்களாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் பகர்ந்துள்ளன. ஒரு நாட்டின் அரசை சிறந்த முறையில் பரிபாலனம் செய்வதற்கு ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் இன்றியமையாதவையாகும். இதனை இளங்கோ அடிகளால் ஆக்கப்பெற்ற தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியமான சிலப்பதிகாரம் ஐம்பெருங்குழு, எண்பேராயம் பற்றி எடுத் துரைத்துள்ளது. இக்காப்பியம் புகார், மதுரை, வஞ்சி எனக் காண்டங்களை அமைத்து மூவேந்தர்களையும் மூன்று நாடுகளையும் அவற்றின் தலைநகரங்களையும் ஒருங்கே இணைக்கிறது. முடியுடை வேந்தர்களின் ஆட்சிச் சிறப்பை எடுத்துரைக்கும் விதத்தில் ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் திறம்பட செயற்பட்ட தன்மையினைப் பதிவு செய்திருந்தமையை அவதானித்து அவற்றை வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகின்றது. இக்கட்டுரை விபரண ஆய்வு முறையியலுக்கு அமையக் கட்டமைக்கப்படுகிறது. பொருத்தமான சந்தர்ப்பங்களில் தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையியலுக்கும் உட்படுத்தப்படும்.

திறவுச் சொற்கள் : இந்து அரசியல், அர்த்தசாஸ்திரம், சிலப்பதிகாரம், ஐம்பெருங்குழு, எண்பேராயம்

## அறிமுகம்

ஆள்கின்ற அரசு, வாழ்கின்ற குடியின் நன்மையை நாட வேண்டும். அப்பொழுது தான் அந்த அரசு வாழ முடியும். அப்படியே வாழ்கின்ற குடி ஆள்கின்ற அரசின் நன்மையை நாட வேண்டும். அப்பொழுது தான் அந்தக்குடி எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்க முடியும். "குடிகள் அரசனைத் தங்கள் முதல் சரீரமாகவும் அரசன் குடிகளைத் தன் மேலான சரீரமாகவும் கருத வேண்டும்" என்பது மகாபாரதம். (சாமிநாதசர்மா, வெ., 2003:17) இந்தக் கொள்கைதான் புராதன இந்து அரசியலுக்கு அச்சாணியாகும். அரசு என்பது ஆளும் சக்தி. இதற்கு உருவம் இல்லை. இந்தச் சக்தி, ஒரு மனிதனிடம் சென்று அவனை அரசனாக்கி விடுகிறபோது ஐஸ்வரியம் என்ற பெயரைப் பெறுகிறது. அதற்கு ஈசுவரத்

தன்மை என்று அர்த்தம். இறைமை என்றும் சொல்லப்படும். அரசனுக்கு ஈசுவரன் என்ற ஒரு பெயரும் உண்டு. இதனை இராஜத்துவம் என்றும் அழைப்பர். இராஜத்துவம் என்ற அரச தன்மையானது ஒருவனை மட்டும்தான் சென்றடையும். அந்த ஒருவன் மூலமாகத் தான் அது இயங்க வேண்டும் என்று புராதன இந்து அரசியல் கட்டாய விதி ஏற்படுத்தவில்லை. அரசன் ஒரு சிலரையோ அல்லது பலரையோ இனங்கண்டு அவர்கள் மூலமாக இயங்குவதற்கும் இடம்கொடுத்திருக்கிறார்கள். மேலும் ஜனங்கள் அவரவர் தர்மத்தை அவரவர் உணர்ந்து அனுஷ்டித்து வருமாறு செய்வது இராஜ்யத்தின் கடமையாகவும் உள்ளது.

புராதன காலத்திலே இந்துக்கள் மத்தியிலே நிலவிய அரசியல் முறை முடியாட்சி முறையாகும். சத்திரியர்களே இந்த அரசியல் பாரம்பரியத்தில் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளார்கள். நீதியோடு சேர்ந்ததாக அங்கங்களைக் கொண்டதாக புராதன இந்து அரசியல் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. அரசு, சாசுவதமான ஒரு ஸ்தாபனமாக இருக்க வேண்டும் என்கின்ற விடயத்தில் முன்னோர்கள் விழிப்பாயிருந்தார்கள். அரசு இல்லாமல் ஒரு கணமேனும் ராஜ்யம் இருக்கக்கூடாது. அப்படி இல்லாமலிருந்தால் மத்ஸய நியாயம் தலைகாட்டிவிடும் என்பதற்காக, அது நிகழாமல் இருப்பதற்காக சில ஏற்பாடுகள் இந்து அரசியலில் பின்பற்றப்பட்டுள்ளது. நாட்டின் மேன்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணுவதன் மூலம் ஒரு அரசன் தனது அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற ஒரு பொறிமுறையை உருவாக்கி அதற்குச் செயலுருவம் கொடுப்பதிலேயே புராதன இந்து அரசியல் பனுவல்கள் கருத்தாக இருந்தன. ஒரு நாட்டின் திறமையான நிர்வாகத்திற்கு விரிவான பொறிமுறைகள் நிறுவப்பட வேண்டும் என்பதை கௌடில்யர் உணர்ந்திருந் தார். ஆதனால் ஒரு அமைப்பின் மனித வளப் பரிமாணங்களையும் அதன் தலைமைத்துவத் தேவைகளையும் அவர் உணர்ந்திருந்தார். ஒரு இராஜ்யத்தின் ஒழுங்கமைப்பு அம்சங் களைப் பொறுத்தமட்டில், அவர் அரசரின் தலைமைத்துவத்தின் கீழ் விரிவான ஒரு கட்டமைப்பினை உருவாக்கியுள்ளார். ஓர் அரசனின் காலத்தில் அவனுக்கு ஆலோசனை கள் வழங்குவதற்காக அரசியல் சுற்றங்கள் அமைக்கப்பட்டுள்ளமையும் இதன்பாற்படும்.

**இந்து இராஜ்யத்தில் ஆலோசனைச்சபை**

புராதன இந்து இராஜ்ய நிர்வாகத்தில் அரசனுக்கு ஆலோசனை வழங்கவென ஆலோசனைச்சபை உள்ளது. பொதுவாக இது மந்திரிபரிக்ஷீத் எனப்பட்டது. முதலமைச் சர், புரோஹிதர், இளவரசர், சேனாதிபதி உள்ளிட்டவர்களுடன் ஏனைய அமைச்சர்களும் இதில் அடங்குவர். இருப்பினும் முதலமைச்சர், புரோஹிதர் மற்றும் முக்கியமான சில அமைச்சர்கள் உள்வட்ட ஆலோசனைச்சபை என்ற வகையில் அரசனுக்கு நெருங்கியவர் களாக இருந்து முக்கிய விடயங்கள் குறித்த ஆலோசனைகளை வழங்குவர். குறிப்பாக உள்வட்ட ஆலோசனைச்சபையில் புரோஹிதர், தலைமை அமைச்சர் உள்ளடங்கலாக மூவர் அல்லது நால்வரே பரிந்துரைக்கப்படுகின்றனர். இவர்களை அர்த்தசாஸ்திரம் மதிசசீவ அல்லது புத்திசசீவ எனக் குறித்துள்ளது. அரசன் உள்வட்ட ஆலோசனைச் சபையைக் கலந்தாலோசனை செய்தே அரசாங்கத்தின் கொள்கைகளை வகுக்கின்றான். இக்கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக மந்திரிபரிக்ஷித்தின் வெளிவட்ட ஆலோசனைச்சபை அமைகிறது. இதனை கருமசசீவ என்ற பெயரில் அர்த்தசாஸ்திரம் முன் மொழிந்துள்ளது. அரசனுக்குச் சர்வ நிறைவேற்று அதிகாரம் இருந்த போதிலும் ஆலோசனைச்சபைக்குக் கட்டுப்பட்டே அரசாங்கத்தின் கொள்கைகள் வகுக்கப் படுவதனை அர்த்தசாஸ்திரம் எடுத்துக்காட்டியுள்ளது. இதன் காரணத்தினாலேயே

"தனியொரு சக்கரம் உருள்வதில்லை" என்ற பிரபல்யமான வாசகத்தை அர்த்தசாஸ்திரம் பயன்படுத்தியுள்ளது. (முகுந்தன், ச., 2014:71-72) இந்த இராஜ்ய ஆலோசனைச்சபையே சிலப்பதிகாரத்தில் ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்ற வகைப்பாட்டினுள் உள்வாங்கப்பட்டிருக்கக்கூடும் எனக் கொள்ளலாம்.

## சிலப்பதிகாரம்

சமயம், சமூகம், அரசியல் சார்ந்த பல கருத்துக்களைக் கொண்டுள்ள முதல் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். சிலப்பதிகாரத்தின் அடிப்படையாக மூன்று கருத்துகள் கூறப்படுகின்றன.

1. அரசியலில் தவறு செய்வோர்க்கு அறக்கடவுள் எமனாகும்.
2. புகழ்பெற்ற பத்தினியை மேலோர் போற்றுவர்.
3. ஊழ்வினை தவறாது தன் பயனை ஊட்டும்

"முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது: அடிகள் நீரே அருளுக" (சிலப்ப.பதிகம்: 61-62) என்ற சாத்தனார் கூற்றிற்கு இணங்க இளங்கோவடிகள் தம் காப்பியப் படைப்பை மூவேந்தருக்கும் உரியதாகவே படைத்துள்ளார். சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் குறிப்பிடுவது போல சிலம்பின் தொடக்கமும் முடிவும் அரசியலோடே பின்னிப்பிணைந் துள்ளது. புகார், மதுரை, வஞ்சி எனக் காண்டப் பெயர்களை அமைத்து, மூவேந்தர் களையும் நாடுகளையும் அவற்றின் தலைநகரங்களையும் ஒருங்கு இணைக்கிறார். மேலும் பத்தினி வழிபாட்டில் தமிழ் மன்னர்களை மட்டுமன்றிப் பிறநாட்டு மன்னர்களையும் இணைத்து ஒற்றுமைப்படுத்துகிறார். அறியாது பிழை செய்த பாண்டியன் தன் உயிரைக் கொடுத்து நீதியை நிலை நாட்டுகிறான். "வல்வினை வளைத்த கோலை மன்னவன் செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது" (25:98-99) என்பதால் அறியலாம். "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே" என்றும், "தேரா மன்னா" என்றும் கண்ணகி பாண்டிய மன்னனைப் பழித்தும் கூட, அவன் அமைதியாகக் "கள்வனைக் கோறல் கடுங் கோல் அன்று" என்று கூறுவது பாண்டிய மன்னனின் அரசியல் அறத்தைக் காட்டுகிறது. பின் நடுவுநிலைமையோடு வழக்கைக் கேட்டுத் தன் தவறு உணர்ந்து உயிரையே விடு கின்றான் பாண்டியன். இது ஒருபுறம் இருக்க, சேரன் செங்குட்டுவனின் அரசவையிலே பெருமக்கள் குழுவும் பட்டத்து அரசியும் உடன் இருந்து அரசியல் முடிவுகளை எடுத்தமை பற்றிய செய்திகளும் காணக்கிடக்கின்றன. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை எடுக்க முடிவு செய்ததன் மூலம் அரசனின் ஆலோசனைச் சபையின் இன்றியமை யாமையை உணரலாம். இவ்விடத்தில் நிற்க, முன்னர் பாண்டியன் ஆலோசிக்காது தண்டனை கொடுத்தமையே அவனது அழிவுக்குக் காரணமாகும். அதேவேளை சேரன் செங்குட்டு வனின் இறைமைக்கு அவனைச் சூழ்ந்துள்ள அவனது ஆலோசனைச் சபையே காரண மாகும். ஆகவே இறைமையான அரசியல் நடவடிக்கைக்கு ஆலோசனைக்குழு எவ்வளவு இன்றியமையாத்தன்மை கொண்டது என்பது இதனாற் தெற்றென விளங்கும். இதனையே சிலப்பதிகாரம் ஐம்பெருங்குழு, எண்பேராயம் என வகைப்படுத்தி அரசியல் நடவடிக் கைகளை ஆலோசித்து அரசனைச் செயற்படுத்துவதற்குப் பரிந்துரை செய் துள்ளது.

## ஐம்பெருங்குழு

ஐம்பெருங்குழு என்பது சிறியசபை. அரசனுடைய நிர்வாகசபை ஆகும். அதாவது செயற்குழு எனப்படும். இதனை மந்திரிசபை என்றும் கூறுவர். ஐம்பெருங்குழு, பண்டைய

ஆட்சி அமைப்பில் ஐவர் அடங்கிய குழுவினரைக் குறிக்கும். அமைச்சர், புரோகிதர், சேனைத்தலைவர், தூதுவர், ஒற்றர் என்று சொல்லப்பெறும் ஐவரே இக்குழுவிற்கு உரியவர். அரசனுக்கு இன்றியமையாதவர்களாக இவர்கள் கருதப்பட்டார்கள். அரசன், ஆட்சி புரிவதற்குப் பெரிதும் துணைசெய்பவர் இப்பெருமக்களே. இக்குழுவில் அங்கத்துவம் வகிப்பதற்குச் சில தகுதிப்பாடுகளும் தேவை என்பதனை அர்த்தசாஸ்திரம் சுட்டியுள்ளது என்பதனை தங்ககந்தசாமி அவர்கள் தமது நூலில் குறிப்பிட்டுள்ளமையும் நோக்கத்தக்கது.

"உள்நாட்டில் உயர்குடிப்பிறப்பு, மிகுந்த செல்வாக்கு, கலைப்பயிற்சி, அஞ்சாமை, வருங்காலம் பற்றிய முன்னுணர்வு, நுண்ணறிவு, நல்லொழுக்கம் உள்ள உரம், உடல்வலிமை ஆகியன கொண்டவர்களே ஐம்பெருங்குழு போன்ற அரசின் அனைத்து அறிவுரை குழுவிலும் இடம்பெறத் தகுதியுடையவர்கள் என்பார் கௌடில்யர்" (தங்க கந்தசாமி, 1987:21)

ஐம்பெருங்குழு பற்றி சிலப்பதிகாரத்தில்,

"ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும்" (1:157)

"அரைசொடுபட்ட ஐம்பெருங்குழுவும்" (3:126)

"அமைச்சர் புரோகிதர் சேனாதிபதியர் தவாத்
தொழில் தூதுவர் சாரணர் என்றிவர்
பார்த்திபர்க்கு ஐம்பெருங்குழு எனப்படுமே" (5:157-160)

என்று கூறப்பட்டுள்ளது. மேலும் இவர்கள் மாசனம், பார்ப்பார், மருத்துவர், வானிமித்தர், அமைச்சர் எனவும் குறிக்கப்பெறுவர் என்பதை,

"மாசனம் பார்ப்பார் மருத்தர் வாழ்நிமித்தரோடு
அமைச்சர் ஆகில் அவைக்களத்தார் ஐந்து" (அடியார்க்கு நல்லார் உரை, 1927:157)

என்று சிலப்பதிகாரத்திலும் அடியார்க்கு நல்லார் உரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**புரோகிதர்**

நான்மறை பயின்றலும் வேள்வி வேட்டலும் இவர்களின் பெரும்பான்மைச் செய்கைகளாயினும் அரசனது அறங்கூறவையில் அறக்களத்து அந்தணர்களாயும் துணை செய்து ஒழுகுகின்றனர். சிலப்பதிகாரம் இவர்களை "அறக்களத்து அந்தணர்" என்கிறது. மேலும் சிலப்பதிகார காலத்தில் வேள்வி வேட்டலும் செய்யப்பட்டது. மதுரை நகரிலும் சேர நாட்டிலும் ஆகுதிப்புகையும் சேரநாட்டில் மாடலன் என்னும் புரோஹிதன் வேள்வி செய்வதும் அச்சந்தர்ப்பத்தில் அரசர்களும் உடனிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (துரை சாமிப்பிள்ளை,சு., *1942:92*) சேரன் செங்குட்டுவன் கடுஞ்சினம் கொள்ளுகின்ற சந்தர்ப் பத்தில் அவனை சினந்தணித்துக் கொள்ளுமாறு ஆற்றுப்படுத்தும் திறமும் புரோஹி தருக்கு இருந்துள்ளது என்பதையும் சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டத் தவறவில்லை.

"இயம்ப வரம்ப! சோழ பாண்டியரல்லது நின்னை இகழ்ந்து கூறினாரல்லர். அடுபோரண்ணலே நீ வெஞ்சினம் கூறுவதற்கு நின்னுடன் எதிர்க்கும் மன்னரும் உளரோ. ஆதலால் நின்சினம் தணிப்பாயாக" *(26:19-24)*

**சேனைத்தலைவர்**

நால்வகை வருணத்ததாருள்ளும் சத்திரியன் தலைசிறந்த போர்மறவனாகத் திகழ்ந்தான். அரசனுக்கு நம்பிக்கைக்குரிய காத்திரமான மூலப்படையினரில் பெரும்பா லானோர் இவ்வருணத்தவர்களேயாவர். படையில் உயர்பதவி வகுத்த பார்ப்பனர்களைப்

பற்றி இதிகாசங்களும் இடைக்காலக் கல்வெட்டுக்களும் கூறுகின்றன. கீழ்வருணத்தாரும் பொருதொழில் புரிந்தனர். இருப்பினும் அவர்கள் தலைமைக்குக் கட்டுப்பட்டவர் களாகவே இருந்துள்ளனர். ஆயினும் சுக்கிரருக்கும் பிந்திய நீதி நூலானது, "படைத்தலைவன் பதவி முதல் உயர்ந்த படைப்பதவிகளுக்கெல்லாம் சூத்திரரையேனும் சண்டாளரையேனும் நியமித்தல் சாலும்" என விதிக்கிறது. மேலும் மனுஸ்மிருதி, "சூத்திரர்களைப் படையில் சேர்க்கக் கூடாது" என்று கருத்துரைக்கவும் அர்த்தசாஸ்திரம், "வைசிகர்களும் சூத்திரர்களும் எண்ணிக்கையில் அதிகம். அவர்களை இணைத்தல் அவசியமாகும்" என்கிறது. ஆகவே, இராஜ்ஜியம் பலமுடையதாவதற்கு நாட்டிலுள்ள அனைத்துப் பிரஜைகளும் படைகளில் உள்வாங்கப்பட்டிருத்தல் அவசியம் என்பது இதன்பாற் பெறப்படும்.

சிலப்பதிகாரத்தில் ஐம்பெருங்குழு, எண்பேராயம் இரண்டிலும் படைத்தலை வருக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஐம்பெருங்குழுவிற்குள்ளேயே அதிகளவில் சேனாதிபதிகள் உள்வாங்கப்பட்டிருந்தனர் என்பதும் சுட்டத்தக்கது. வஞ்சி நகரின்கண் வடதிசைப் படையெடுப்பிற்காகப் போர்க்கோலம் கொண்ட சேரன் செங்குட்டுவன், தனது வீரர்களுக்கும் பெரும்படைத் தலைவர்களுக்கும் பெருஞ்சோறு வகுத்து மகிழ்ந்தான் என்ற செய்தி காணப்படுகிறது.

"அரும்படைத் தானை அமர்வேட்டுக் கலித்த
பெரும்படைத் தலைவர்க்குப் பெருஞ்சோறு வகுத்து...." (26:48-49)

மேலும் சிறந்த சேனாபதிகளைக் கொண்ட படையமைப்பை சேனாமுகம் என்று சிலப்பதிகாரம் சுட்டியுள்ளது. "சேனாமுகம் வாழ்க", "தாழ்கழல் மன்னன் தன் திருமேனி வாழ்க சேனாமுகம்" *(20:191-192)*

**தூதுவர்**

தூதுவர், அரசன் விடுத்த செய்திகளைப் பிற அரசரிடத்துக் கொண்டு செல்பவரும் அரசனுடைய ஆணைகளை நாட்டதிகாரிகளிடத்தும் ஊரதிகாரிகளிடத்தும் கொண்டு செல்பவரும் என இரு வகையினராவர். அரசதூதர் சட்டையும் தலைப்பாகையும் அணிந்திருப்பர். அதனால் அவர்களைக் கஞ்சுக மாக்கள் *(26:166), (28:80)* என்றும் சட்டையிட்ட பிரதானிகள் என்றும் அழைக்கப்பட்டனர். சிலப்பதிகாரத்தில் தலைமைத் தூதன் கஞ்சுக முதல்வன் எனப்பட்டான்.

"சஞ்சயன் முதலாத் தலைக்கீடு பெற்ற
கஞ்சுக முதல்வரீ ரைஞ்நூற் றுவருஞ்" (26:137-138)

என்ற பாடலடியிருந்து தூதர் பெருந்தொகையினராக இருந்துள்ளனர் என்பது அறியப்படுகிறது. மேலும் தூதராகச் செல்பவர்களும் ஒற்றர்களாகவும் செயற்பட் டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**ஒற்றர்**

தம் நாடு செலுத்தவும் அயலாரிடமிருந்து நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஒற்றர் பணி தேவையாகிறது. உளவுவழி தம்மைச் சுற்றி நடப்பவற்றை அறியாவிட்டால் கலகக்காரர், பகைவர் இவர்கள் கை ஓங்கி நாடும் அழிந்துபோகும். சில வேளைகளில் நாடாண்ட மன்னனே உருமாறிச்சென்று குடிகளின் நிறை குறைகளை ஒற்றி அறிந்து கொண்டான். நாடாள்வோர் நாளும் தாம் செய்ய வேண்டிய இன்றியமையாப் பணியான ஒற்றாளுதலை பொச்சாப்புக் கொண்டு அலட்சிப்படுத்தினால் பகைவர் புலன்களை

அறிந்து கொள்ள முடியாது. ஆகவே அரசுக்கு ஒற்றனும் அரசியல் நூலும் இரு கண்கள் எனக் கொள்ளப்படுகிறது. ஸ்திரமான இராஜ்ய பரிபாலனத்தின் அச்சாணியாக புலனாய்வு வலைப்பின்னல் அமைந்துள்ளது என்பதை வலியுறுத்துகின்ற அர்த்தசாஸ்திரம் புலனாய்வாளர்களை சம்ஸ்தாக்கள், சஞ்சாரக என இரண்டு பிரிவுக்குள் உள்ளடக்கி யுள்ளது. (முகுந்தன்,ச., 2014:99) இதனால் தான் சிலப்பதிகாரம் கட்டமைத்துள்ள ஐம் பெருங்குழுவிலும் புலனாய்வாளர்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளனர். சிலப்பதி காரத்தில் சஞ்சயன் தூதரில் தலைமை இடத்தை வகித்தபோதும் ஒற்றனாகவும் செயற் பட்டுள்ளான். சஞ்சயனைப் போலவே நளனும் ஒற்றர் தலைவனாயிருந்தான். இவர்கள் அரசன் ஆணையால் வேற்று நாடுகளுக்கு உருமாறிச் சென்று தமது அரசியல் நடவடிக் கைகளை மேற்கொண்டமை போன்று வேற்று நாட்டு அரசர் தம் ஒற்றரும் வஞ்சி வந்து மறைந்து உறைந்தனர் என்ற செய்தியும் பதிவாகியுள்ளது. வடநாட்டுப் போர் தொடங்கத் திட்டமிட்ட சேர மன்னன், தூது அனுப்ப எண்ணுகின்ற வேளை, வஞ்சி நகரில் முரசு அறைந்து அறிவித்தாலே, செய்தி வடநாடு எட்டிவிடும் என்று அழும்பில்வேள் கூறு கிறான். காரணம் ஒற்றர்களே அவர்தம் அரசுக்குச் செய்திகளைப் பரிவர்த்தனை செய்யும் தன்மை உடையவர். அவர்கள் வஞ்சி நகரின் வாயிலைப் பிரியாது காத்துக்கிடப்பதே ஆகும். இதனை பின்வருமாறு சிலப்பதிகார அடிகளிலிருந்து அறிய முடிகிறது.

"நண்ணார் ஒற்று நம். காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா.
வம்பணி யானை வேந்தர் ஒற்றே, தஞ்செவிப்படுக்கும் தகைமைய அன்றோ?
அறைபறை என்றே அழும்பில்வேள் உரைப்ப" (25:173-177)

**எண்பேராயம்**

எண்பேர் ஆயம் என்பது பொதுமக்கள் சபையாகும். நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ள அனைவருடைய பிரதிநிதிகளும் எண்பேர் ஆயம் எனும் சபையிலே அரசாங்கத்தை நடத்தும் பொறுப்புள்ள ஒவ்வொரு துறையின் பிரதிநிதிகளும் இருந்தனர். சங்கமருவிய காலந்தொட்டு நாட்டு நலங்குறித்து அரசாட்சிப் பொறுப்பில் அரசருக்குரிய மந்திராலோசனை கூறும் உரிமை உள்ளவர்களே எண்பேராயத்தினர். சங்க காலத்தில் இவ்வாறான அமைப்புக்கள் பல இருந்திருக்லாம். எண்பேராயத்தினரை எண்பெருந் துணைவர்கள் என்றும் கூறுவர். சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை முதலிய நூல் களில் இவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. எண்பேராயத்தில் கரணத்திய லகர், கருமவிதிகள், கனகச்சுற்றம், கடைக்காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர் ஆகியோர் இருந்தமையைத் திவாகர நிகண்டு கூறியுள்ளது. (வாழ்வியற் களஞ்சியம், 769) இதனை சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையிலும் கண்டுகொள்ளலாம்.

"கரணத்தியலவர் கருமவிதிகள் கனகச்சுற்றங்
கடைக்காப்பாளர் நகர மாந்தர் நளி படைத்தலைவர்
யானைவீரர் இவுளி மறவர்
இணையர் எண்பேராயமென்ப" (துரைசாமிப்பிள்ளை. சு., 1942:90)

**கரணத்தியலவர்**

கரணத்தியலவர் என்போர் நாட்டு நலங்குறித்து அரசருக்கு உதவியாகத் திட்ட மிட்டு அரசாங்கக் கணக்குகளைப் பார்ப்பவர். கௌடில்யர் இராஜ்ய பரிபாலனத்தில் நிதி முகாமைத்துவத்திற்கே அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளார். அரச நிர்வாக மைய

நரம்பாக வர்ணிக்கப்படும் நிதித்துறையை நிர்வகிப்பதற்கு மூன்று பிரதான அதிகாரிகளை அர்த்தசாஸ்திரம் பரிந்துரை செய்துள்ளது. அவர்கள் சமாஹர்தர் (The Collector General), சம்னிதர் (The Treasury General), பிரதம கணக்கதிகாரி (கணக்காளர்) (Superintendent of Accounts) (முகுந்தன்,ச., 2014:74) எனப்படுவர். சிலப்பதிகாரத்தில் கணக்கர் என்றும் கணக்கியல் வினைஞர் (20:40) என்றும் இவர்கள் வழங்கப் பெறுகின்றனர். பொருட்பகுதி காவிதி மாக்கள் என்னும் கூட்டத்தாரால் ஈட்டியும் வகுத்தும் காத்தும் மேற்பார்க்கப் பெற்று வந்தது. இறுக்கும் (வரி) இறையினை உரிய காலத்திலே மக்களிடமிருந்து தொகுத்தல் இவர்களுக்குக் கடன். பொருளாக்கம் பற்றிய ஆராய்ச்சி நிகழும் போதெல்லாம் அரசன் பொருளமைச்சனது சூழ்ச்சித் திறனை நாடியே நிற்பான். கண்ணகிக்குக் கோயில் கட்டிய போது “வரி தவிர்க்க“ என்ற வேந்தன் ஆணையை நிறைவேற்றிய “ஆயக்கணக்கர்“ என்பவர் இப்பொருளமைச்சனின் கீழுள்ள அதிகாரி ஆவார். மேலும் சேரனின் சபையிலே அழும்பில் வேள் கணக்கதிகாரியாக செயற்பட்டுள்ளான் என்பது “அழும்பில் வேளோடாயக் கணக்கர்” (28:205) என்று குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

**கருமவிதிகள்**

அரசனின் பொறுப்பில் இராச்சிய காரியம் நடத்தும் தலைவர்கள் ஆவார். ஒரு நாட்டு ஆட்சியில் வருவாய், நீர்ப்பாசனம், நீதி பாதுகாப்பு முதலிய பல்வேறு துறைகள் அமைந்திருக்கும் அவற்றில் தனித்தனியே துறைத்தலைவராகப் பொறுப்பேற்று ஆட்சியைக் கொண்டு செலுத்துபவர்களாக இவர்கள் பணியாற்றினர். இவர்களை கருவூல நாயகன் எனவும் கூறுவர். அர்த்தசாஸ்திரம் சன்னிதாதா என அழைக்கிறது. (பசாம், A.L., :136)

**கனகச்சுற்றம்**

கனகச்சுற்றம் என்பது கருவூல அதிகாரிகளைக் குறிக்கும். இவர்கள் அரசிற்குரிய கருவூலப் பொறுப்பினையேற்று நடத்துபவர்கள். அரசனிடம் மிகவும் நம்பிக்கையைப் பெற்றவர் களாகச் செயற்பட்டனர். இவர்கள் இடைக்காலத்தில் பண்டாரகர், பண்டாரத்தார் என்றெல்லாம் கிளைத்தற்கு முன்னோடிகளாய் விளங்கினர்.

**கடைக்காப்பாளர்**

வாயிற் காப்போர் என்றும் கடைக்காவலர் என்றும் அழைக்கப்பட்டனர். பாதுகாப்புப் பொறுப்பில் பல்வகையினராக இருப்பினும் வாயில் காவலரே அரண் மனைக் காப்பிற்குப் பொறுப்பேற்று வாயிலில் புதியவர்கள் வரின் அவர்களைப் பற்றி அரசனிடம் எடுத்துரைத்து அவனது மாற்றங்கேட்டுச் செயற்பட்டவர்களாவர். கண்ணகி தன் வழக்கினை உரைக்கப் பாண்டியனைச் சந்திக்கும் முன் அவனது அசைவிற்காக வாயில் காப்பாளனிடம் சென்று, “வாயிலோயே!“ என்று அழைத்துத் தன் கருத்தைக் கூறியதை நினைவிற்குக் கொண்டு வருவதால் இதனை அறியலாம்.

“வாயிலோயே! வாயிலோயே!
அறிவுஅறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே!" (19:23-25)

இதனை சீவகசிந்தாமணி “கண்டு கடை காவலர்கள் கழற“ எனக் கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் நகர்க்காவலர் “அரையிருள் யாமத்தும் பகலும் துஞ்சாது”

காவல் புரிந்தனர். சுருங்கையிடம், அந்தப்புரம், பண்டகசாலை, மூல பண்டாரம், பாசறை, பள்ளியறை முதலிய இடங்களில் யவனரும் பிற மிலேச்சரும் காவலராகத் தொழில் புரிந்தனர். (துரைசாமிப்பிள்ளை, சு., *1942:96*)

**நகரமாந்தர்**

இவர்கள் நாட்டு ஆட்சிப் பொறுப்பில் பொறுப்புடன் பங்கேற்கும் நகரவாழ் மக்களாவர். மன்னராட்சியிலும் குடியரசிற்குரிய கூறுகள் அமைய இவர்கள் முன்னோடிகளாய்ச் செயற்பட்டவர்களாவர். அரசவீதி, வணிக வீதிகள், அவற்றைத் தொடர்ந்து நால்வகை மாக்கள் வாழும் பகுதிகள், மறையோர் வாழும் பகுதிகள் என்பன அமைந்திருந்தன. இளங்கோவடிகள் நகரமாந்தர் வாழும் நிலையினை

"பெருங்குடி வாணிகர் மாடமறுகும்

மறையோர் இருக்கையும் வீழ்குடி யுழவரொடு விளங்கிய கொள்கை

ஆயுள்வேதரும் காலக்கணிதரும் பால்வகை தெரிந்த பன்முறை இருக்கையும்"

என முறைப்படுத்தி ஓதியிருக்கின்றமையும் ஈண்டு நோக்கத்தக்கது. கலத்தில் சென்று வாணிகம் செய்யும் திருவினரைப் பரதர் என்றும் ஏனையோரை வணிகரென்றும் உரைக்கக் காணலாம். இவர்கள் அரசர்களுக்கு இன்றியமையாதவர்களாக அடிகளார் மொழிந்துள்ளார். "அரச குமரரும் பரத குமரரும்" (*5:158*), "அரசிளங் குமரரும் உரிமைச்சுற்றமும், பரதகுமரரும் பல்வேறாயமும்" (*6:155-158*) என்று சிறப்பிக்கப்படுதல் காணலாம். இவர்களுக்கு அடுத்த நிலையில் மறையோர் விளங்குகின்றனர். இவர்கள் அறக்களத் தந்தணர்களாகவும் வேள்வி செய்பவர்களாவும் சிறப்புப்பெறுகின்றனர். அடுத்து வேளாளரை "வீழ்குடி யுழவர்", "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப்போர்" என்றும் பாராட்டிப் போற்றுகிறது. இவ்வாறான முறைப் படுத்தல்கள் நாட்டின் அரசியலுக்கான அறங்காக்கும் தகுதிப்பாட்டையே எடுத்தியம்பு கின்றன. மேலும் அரசர்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் உரிமைச்சுற்றத்துடன் உலா போகும் சந்தர்ப்பத்தில் அரசன் தேவியரும் உடன் செல்வது வழக்கம். நாட்டில் நிகழ வேண்டிய நிகழ்ச்சிகள் எவையேனும் இருப்பின் அரசன் அவ்விடத்தே அரசவை கூட்டித் தீர்ப்புச் சொல்வதுமுண்டு என அடிகளார் காப்பியத்தில் சுட்டியுள்ளார்.

**படைத்தலைவர்**

படைத்தலைவர் என்போர் காலாட்படைத்தலைவராவர். நால்வகைப் படைகளுள் இவர்களுக்குத் தனிச்சிறப்புடைய தலைமைப் பொறுப்பு உண்டு. இவர்களுள் சேனாதிபதியர் தேர்ந்தெடுக்கப்பட்டு மன்னரின் ஐம்பெருங்குழுவில் இடம் பெற்றனர். போர்முறை உத்திகளில் இவர்கள் நன்கு தேர்ந்த பயிற்சி பெற்றவர்களாவர். செங்குட்டு வனது தரைப்படைக்குத் தலைமை வகித்த தலைவன் வில்லவன் கோதை என்பவனாவான். இவனே செங்குட்டுவனது வட யாத்திரையில் அவனுடைய சேனை களை நடத்திச்சென்று ஆரியவரசருடன் நிகழ்ந்த பெரும்போரில் வெற்றிபெற்றவன். இதனை,

"வில்லவன் கோதையொடு வென்று வினைமுடித்த

பல்வேற் றானைப் படை" (26:251-252)

மேலும், இவர்கள் போருக்கு எழுமுன் போர்வெறி கொண்டு வஞ்சினம் கூறலும், அது காப்பது குறித்துக் கடும்போர் உடற்றுதலும் வெற்றி பெற்ற வழி வாகை மாலை சூடுதலும் வழக்கமாகும். இவ்வாறு தமக்காகப் போரில் போரிடும் வீரரைப் போர் முடிந்தவுடன் தம்

முன்னர் ஒருங்கு கூட்டி அவர்தம் வீரத்தை அவர்முன் தனித்தனியே எடுத்துச்சொல்லிப் பாராட்டிப் பொன்னால் செய்த வாகைப்பூவை அணிவித்து, அப்படைத்தலைவர் மற்றும் வீரர்களுடன் ஒருங்கிருந்து உணவுண்டலும் செங்குட்டுவனின் அரசியலிலே நடைபெற்ற நிகழ்வாகும். இந்நிகழ்வினை அடிகளார்,

"நிறஞ் சிதை கவயமொடு நிறப்புண் கூர்ந்து
புறம்பெற வந்த போர்வாள் மறவர்
வருக தாம்என வாகைப் பொலந்தோடு
பெருநா ளமையம் பிறக்கிடக் கொடுத்து" (28:41-44) என்று உரைத்துள்ளார்.

**யானைவீரர்**

இவர்கள் களிற்றியானைகளைத் தம் குறிப்பிற்கு ஏற்பப் பழக்கிச் செலுத்தும் மறவர்கள். பகைவரின் கோட்டை கொத்தளங்களைத் தகர்க்கவும் மாற்றாரின் படைவீரர்களைச் சிதைக்கவும் யானைகளை ஏவும் திறத்தவர்களாவர். சிலப்பதிகாரம் "களிற்றின் தொகுதியர்" *(5:159)* எனச் சுட்டுகிறது.

**குதிரைவீரர்**

நல்லிணக்கங்கள் பொருந்திய தரமான குதிரைகளை விரைந்து செலுத்தி வீரம் விளைவிப்பவர்கள். பிறருக்குச் செய்திகளைக் கொண்டு சேர்க்கவும் போர்க்களத்தில் தம் ஆற்றல் தோற்றவும் முனைந்து நின்ற இவர்களை "இவுளி வீரர்" என்றும் குறிப்பது வழக்கம். "கவர்பரிப் புரவியர்" *(5:159)* எனச் சிலப்பதிகாரமும் சுட்டித்து நிற்கிறது.

**அரசியலில் ஐம்பெருங்குழுவினதும் எண்பேராயத்தினதும் முக்கியத்துவம்**

ஐம்பெருங்குழு, எண்பேராயம் இவைகளின் ஆலோசனையின்படி நடைபெறும் அரசு சிறந்த அரசாகத்தான் இருக்கும். அந்த அரசாங்கத்தின் தலைவன் ஆளப்பிறந்த அரச குலத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அவன்தன் விருப்பப்படி எதையும் செய்து விடமுடியாது.

இவ்வவைகளில் அங்கத்துவம் பெறுபவர்கள் அரசனுக்கு அரச அலுவல்கள், அரச நடைமுறைகளில் தக்க நிலையில் ஆலோசனை வழங்குவோராகவும் சான்றோராகவும் அங்கம் வகித்தனர். இவர்கள் அரசனுடன் உடனிருப்பவர்களாக இருக்கும் நிலையில் அரசியல் சுற்றத்தவர்கள் என்றும் அழைக்கப்படுவதுண்டு. சிலப்பதிகாரத்தில் பாண்டிய நாட்டு அரசியல் நடவடிக்கைகளில் இத்தகைய அமைப்புக்கள் இல்லாமையும் அதனால் விளைந்த அரசியல் வீழ்ச்சியையும் எடுத்துக் காட்டும் அடிகளார் சேரன் செங்குட்டுவனின் அரசியல் இறைமைக்கு இத்தகைய அமைப்புக்களின் ஆலோசனையே பிரதான இடம் வகித்துள்ளது என்பதையும் எடுத்துவிளக்கி நிற்கும் திறன் பாராட்டுதற்குரியது.

பாண்டிய நாட்டில் மன்னனுக்கு அறநெறிகள் கூற, அவனை நெறிப்படுத்த தக்க அமைப்புக்கள் இல்லாமையினால், அரசன் தக்கவழிப்படுத்தப்படா நிலையில் கூறுவார் பேச்சினை உண்மை என நம்பும் பாங்கில் இருந்துள்ளான். பொற்கொல்லன் கொண்டுவந்த சிலம்பின் உண்மைத் தன்மையை அறியாமல் பாண்டியன் உடனடியாக முடிவெடுத்துவிடும் நிகழ்வே அவனுக்கு அரசியல் ஆலோசனை கூறுவார் யாருமில்லை என்பதைக் காட்டுகிறது.

"வினை விளை காலம் ஆதலின் யாவதும்
சினை அல் வேம்பன் தேரானாகி"

என்னும்படி அரசன் சிறிதும் மற்றவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் அவனே எடுத்த முடிவால் கோவலன் கள்வனாகின்றான். இறைமை பூண்டு ஆராயாது கள்வன் எனக் கூறிய நெடுஞ்செழியன் வானம் ஆளப் போக வேண்டியவனாகின்றான். அதனால் கண்ணகி அரசனிடம் நீதி கேட்பதற்கு முன் அரசின் சபையில் அங்கம் வகிக்க வேண்டிய மக்களை, சான்றோர்களை, கடவுளை, பெண்களைப் பார்த்து நீதி கேட்கிறாள்.

"பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்......."

"சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்......."

"தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டகொல்..."

என நீதி கேட்கும் கண்ணகியின் சொற்களில் அரசனுக்கு நிதி கூற சான்றோர் சபை இல்லை என்பதைக் காட்டுகிறது.

அடுத்து, வெள்ளி மாடத்தில் சேரன் செங்குட்டுவன் தன் அரசியல் சுற்றத்துடனும் தன் துணையாள் வேண்மாளுடனும் சூழ்ந்திருந்த நிலையிலேயே கண்ணகி வானம் ஏறிய காட்சி சொல்லக் கேட்டலானான். இச்சந்தர்ப்பத்தில் கண்ணகி, பாண்டிமாதேவி இவர்கள் இருவரில் யாருக்குச் சிலை எடுப்பது தொடர்பில் சேரன் அரசியல் சுற்றத்துடன் கலந்தாலோசித்த பின்பே கண்ணகிக்கு சிலை எடுக்க ஆயத்தமானான். இதற்கு முக்கிய பங்கு வேண்மாளையே சாரும். "உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும், செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும், நன்னுதல் வியக்கும் நலத்தோ ரியாரென, மன்னவன் உரைப்ப" அதற்குச் சேரன் மாதேவி, தன் கணவன் இறந்ததும் தானும் இறந்தவள் பாண்டிமாதேவி. இருப்பினும் பாண்டிமாதேவியின் இறப்பு சிறப்பு ஆயினும் இது கணவனுக்குப் பின்பு வாழ முடியாத இயலாமையின் வெளிப்பாடாகவே கருதவியலும். ஆனால் தன் கணவன் இறந்த பின் அவனைக் குற்றமற்றவன் எனக் காட்டி, அத்துடன் நில்லாமல் அவன் இல்லாத வாழ்வின் துயரத்தை அனுபவித்து சேரநாடு அடைந்த கண்ணகிதான் பத்தினிக் கடவுளாக வணங்கப்பட வேண்டியவள் என்கிறாள் சேரமாதேவி. ஆகவே சேரனின் தனிப்பட்ட முடிவாக கங்கைக்குச் சென்று கண்ணகிக்குக் கல் கொண்டு வரும் முடிவு அமையவில்லை. பாண்டிய அரச சுற்றத்தில் ஆலோசனைச்சபையின்மை அரசியலில் பாதிப்பை உண்டாக்கியது. அதேவேளை சேர அரசனின் சுற்றத்தில் ஆலோசனைச்சபை வினைத்திறனான அரசியல் நடவடிக்கைக்கு இட்டுச் சென்றுள்ளமை யும் இங்கு நோக்குமிடத்து ஐம்பெருங்குழுவினதும் எண்பேராயத்தினதும் இன்றியமையாத்தன்மை புலப்படும்.

**வில்லவன் கோதையும் அழும்பில் வேளும்**

சேரன் செங்குட்டுவனின் குதிரைப் படைத்தலைவனாகிய வில்லவன் கோதையும் கணக்கதிகாரியான அழும்பில் வேளும் ஆட்சித்துணையாய் இருந்தனர். பத்தினிக் கடவுளைப் பரைசல் வேண்டும் என்று முடிவு எடுத்தபின் அக்கடவுளுக்குப் பொதிகைக் கல்லை விட கங்கைக் கல்லே சிறந்தது என்ற முடிவுக்கு சேரனின் அரசசுற்றம் இணைங்கிய போது, இதற்காக சேரன் வடநாடு நோக்கி படையெடுக்க உள்ள முறைமை அறிவிக்கப் பெறுகிறது. அப்போது வில்லவன் கோதை கங்கைக்குச் செல்லும் அரசனின் முடிவை வரவேற்கிறான். "இமயமால் வரைக்கும் எம் கோமான் செல்வது கடவுள் எழுத ஒரு கல்லுக்காகவே. ஆதலின் வடதிசையிலுள்ள மன்னருக்கெல்லாம் தென் தமிழ் நன்னாட்டுச் செழுமையினை உடைய வில், கயல், புலி ஆகிய கொடிகளைத் தத்தம் நாடுகளினும் பறக்க விடுமாறு வரைக ஈங்கு"(25:68-72) என வடநாடு செல்லும் படைமுறை ஓலை மூலம்

தெரிவிக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்வழி அரசனின் அரசியல் விவகாரங்களில் அவனிடம் முழு அரச சுற்றமும் வந்து அவனுக்கு உதவிகள் பல செய்துள்ளது என்பதை உணர முடிகிறது.

மேலும் அழும்பில் வேள் என்பவன் ஓலைகள் அனுப்ப வேண்டாம். இங்கு பறையறிவித்தாலே போதும், அதனை ஒற்றர்கள் மற்ற நாடுகளுக்குச் சொல்லிவிடுவர் என்று கூறுகிறான். இதனால் வடதிசைச் செல்லும் செலவைக் குறித்த அவனது ஆலோசனை சேரனின் அரசாட்சிக்குப் பெரும்பேறுடைத்து. இங்கு கணக்கதிகாரியான அழும்பில் வேளின் இந்த ஆலோசனை சேரனின் வெற்றிக்கு சாதகமானதாகும்.

**நிறைவாக**

அரசியல் சுற்றம் என்பது ஓர் அரசனின் இணை பிரியாத ஒன்று. அதன் தேவை எக்காலத்தும் மன்னனுக்குத் தேவையாகும். இதனைப் பிரிந்து அரசன் தனியாக நின்று முடிவெடுக்கும் நிலையில் அவனின் முடிவு எதிர்பார்த்த வெற்றியைத் தராது என்பதை சிலப்பதிகாரத்தின் மூலம் உணர முடிகிறது. இங்கு ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்பன அரசனின் அரசியல் சுற்றங்களாகச் செயற்பட்டு வந்துள்ளன. புராதன இந்து சமூகத்தில் அறம் கூறும் அவைகள் அமைக்கப்பட்டு, அவற்றினூடே தண்டங்கள் நிறைவேற்றப் பட்டன. அத்தோடு அரசனின் அங்கங்களாகச் செயற்பட்டு வந்த நிலையில், அரசனின் அரசியல் விவகாரங்களில் முக்கியமான முடிவுகள் எடுக்கப்படும் இடத்தில் ஆலோசனை நல்குபவர்களாகவும் விளங்கி வந்துள்ளனர். ஆகவே, அரசு என்பது தனியாக இயங்க வல்லதாயினும் அதன் இறைமை நிலைநாட்ட அரசியல் சுற்றங்களின் காத்திரமான அணுகு முறை சுமூகமானதாக அமையும் பட்சத்தில் அது அரசின் வெற்றியைத் தீர்மானித்துக் கொள்ளுவதற்கு உறுதுணையாகின்றது. அரசியல் சுற்றங்களான ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயம் இரண்டினதும் ஆலோசித்த முடிவுகள் சேரனின் வெற்றியை நிர்ணயித்த அதேவேளை, பாண்டியன் சுற்றத்தினரிடம் ஆலோசனை பெறாது சுயேட்சையாக முடி வெடுத்த திறன் அவனது வீழ்ச்சியை நிர்ணயித்தது என்பதை அடிகளார் சிலப்பதிகாரத்தில் கோடிட்டுக் காட்டுகின்றார். மேலும் சேரனின் அரசாட்சியில் இவர்கள் சிறந்த ஆலோசனை வழங்குபவர்களாகவும் முக்கியமான சந்தர்ப்பங்களில் நாட்டின் நன்மை கருதி மன்னனுக்கு தெளிவை ஏற்படுத்தியவர்களாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளமையும் இங்கு நோக்கற்பாலது. ஆகவே, நாட்டின் ஸ்திரமான ஆட்சிக்கு அரசியல் சுற்றம் இன்றியமையாத ஒன்று என்பதை சிலப்பதிகாரத்தில் ஐம்பெருங்குழு, எண்பேராயத்தின் மூலம் அறிந்த கொள்ள முடிகிறது.

**உசாத்துணை நூல்கள்**


1. சாமிநாத சர்மா. வே., (2003). புராதன இந்தியாவில் அரசியல். பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம், சென்னை.
2. சாமிநாதையர். வே.,(பதி). (1927). சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும். கேல்பரி அச்சுக்கூடம்.
3. தங்ககந்தசாமி. (1987). போரியல் அன்றும் இன்றும். சென்னைப் பல்கலைக்கழகம். சென்னை.
4. தேவநேயப்பாவாணர். ஞா., 1952). பழந்தமிழாட்சி. கீழையியல் ஆய்வு நிறுவனம். கல்வி அறக்கட்டளை சார்ந்த தமிழ்மண் பதிப்பகம். சென்னை.
5. துரைசாமிப்பிள்ளை. சு., (1942). தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.
6. பசாம். A.L., (1956). வியத்தகு இந்தியா. இலண்டன் சிட்சுவிக்கு
7. புலியூர்க்கேசிகன். (1958). சிலப்பதிகாரம். பாரி நிலையம். சென்னை.
8. முகுந்தன். ச., (2014). இந்து இலக்கியங்களில் பொருளியல் அரசியல் நீதி பரிபாலனம். கௌரி அச்சகம். கொழும்பு.